# கிராமிய சேவைத் திட்டம்

சேலம் மண்டலம்
தாரமங்கலம் மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை
அத்திக்கட்டானூர் கிராமம்




## (WCSC-VSP) கிராமிய சேவைத் திட்டத்தின் இலக்கு

- நோயற்ற வாழ்வு
- கல்வியில் மேன்மை
- சுற்றுப்புற சுகாதாரம்
- முதியோரைப் பாதுகாத்தல்
- மகளிர் மேம்பாடு
- குடும்ப அமைதி
- கர்மயோக வாழ்க்கைநெறி
- மனிதநேயம்
- மதநல்லிணக்கம்
- சமுதாய விழிப்புணர்வு

**தூய்மையும் பசுமையும் மிக்க ஆரோக்கியமான அமைதி கிராமம்**

# சேலம் மண்டலம்
# தாரமங்கலம் மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை
# அத்திக்கட்டானூர் கிராமம்

## Contents

1. செயல்பாட்டு அறிக்கை ........ 3

2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம் ........ 4

3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும் ........ 4

4. அத்திக்கட்டானூர் கிராமத்தின் தொடக்கவிழா ........ 5

5. மருத்துவ முகாம் ........ 7

6. மனநல ஆலோசனை முகாம் ........ 7

7. சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம் ........ 7

8. முதல் நிலை அகத்தாய்வு ........ 8

9. இரண்டாம் நிலை அகத்தாய்வு ........ 8

10. மூன்றாம் நிலை அகத்தாய்வு ........ 8

11. சர்வதேச யோகா தினம் ........ 9

12. நிறைவு விழா அழைப்பிதழ் ........ 9

13. அனுபவ உரை - Result Inference ........ 10

14. எதிர்காலத் திட்டங்கள்: ........ 16

15. வாழ்த்து: ........ 16

## 1. செயல்பாட்டு அறிக்கை

| S.No | Description | Information | | |
|---|---|---|---|---|
| 1. | கிராமத்தின் பெயர் | அத்திக்கட்டானூர் | | |
| 2. | கிராமிய சேவைத் திட்டம் தொடங்கிய நாள் | 15-02-2025 | | |
| 3. | கிராமிய சேவைத் திட்டம் நிறைவுநாள் | 11-07-2025 | | |
| 4. | கிராமிய சேவைத் திட்டம் காலம் | 5 மாதங்கள் | | |
| 5. | மண்டலம் | சேலம் | | |
| 6. | அறக்கட்டளை | தாரமங்கலம் | | |
| 7. | நிதி உதவி வழங்கியவர் | *Prof.V.S.Arutselvi, Director of VISION* | | |
| 8. | கிராம மக்களின் மொத்த எண்ணிக்கை | ஆண்:130 | பெண்:205 | மொ:335 |
| 9. | கிராமத்தில் உடற்பயிற்சி கற்றவர்கள் | ஆண்:120 | பெண்:390 | மொ:510 |
| 10. | காயகல்ப பயிற்சி கற்றவர்கள் எண்ணிக்கை | ஆண்:120 | பெண்:390 | மொ:510 |
| 11. | தவம் பயின்றவர்களின் எண்ணிக்கை | ஆண்:120 | பெண்:390 | மொ:510 |
| 12. | முதல் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:50 | பெண்:145 | மொ:195 |
| 13. | இரண்டாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:50 | பெண்:145 | மொ:195 |
| 14. | மூன்றாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:50 | பெண்:145 | மொ:195 |
| 15. | பிரம்மஞானம் பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:06 | பெண்:27 | மொ:33 |
| 16. | உடற்பயிற்சி பயின்றவர்கள் (Students below 14) | ஆண்:25 | பெண்:28 | மொ:53 |

## 2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம்

*பாமர மக்களின் தத்துவஞானி அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஏழை, எளிய மக்களும் ஆன்மிக அறிவைப்பெற்று அதன் மூலம் உடல் நலம், உயிர்வளம், மனவளம், நட்பு நலத்துடன் துன்பமில்லா இன்பமான வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்வின் நோக்கமான இறைநிலையை உணர்வதற்கான வழிமுறைகளை வழங்கி உள்ளார்.*

*அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் குறிக்கோள் உலக அமைதி. தனிமனித அமைதியின் மூலமே உலக அமைதி பெறமுடியும் என்பது மகரிஷியின் திண்ணமான எண்ணமாகும். மகான் அவர்கள் வழிமுறைப்படுத்திய மனவளக்கலை SKY யோகா பயிற்சிகள் கிராம மக்கள் அனைவருக்கும் சென்று அடைய வேண்டும் என்பது குருவின் விருப்பம்.*

*மகானின் எண்ணத்தை செயல்படுத்தும் வகையில் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர் பத்மஸ்ரீ.அருள்நிதி.SKM.மயிலானந்தன் அவர்களால்* **358-**வது கிராமமாக *அத்திக்கட்டானூர் கிராமத்தில் கிராமிய சேவைத்திட்டம் துவங்கப்பட்டது.*

*இக்கிராமத்தில் 15-02-2025*-ஆம் தேதியிலிருந்து **11-07-2025-**ஆம் நாள் வரை *மனவளக்கலை யோகா பயிற்சிகளும், பலசிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டன. இதன் மூலம் கிராம மக்கள் அன்பும், அமைதியும் மற்றும் ஆரோக்கியமும் அடைந்துள்ளனர்.*

## 3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும்

- நோயற்றவாழ்வு
- குடும்பஅமைதி
- முதியோரைபாதுகாத்தல்
- கல்வியில்மேன்மை
- சுற்றுப்புறசுகாதாரம்
- சமுதாயவிழிப்புணர்வு
- மதநல்லிணக்கம்
- மனிதநேயம்

**ஆரோக்கியமும் அமைதியும் மிக்க வேதாத்திரி கிராமம்**

## 4. அத்திக்கட்டானூர் கிராமத்தின் தொடக்கவிழா

*Prof.V.S.Arutselvi, Director of VISION* அவர்களின் நிதி உதவியுடன் சேலம் மண்டலம், ஜோதிபுரம் பராஞ்சி மனவளக்கலை மன்ற அறக்கட்டளை சார்பாக 15-02-2024ஆம் தேதி உலக சமுதாய சேவா சங்கத் தலைவர், பத்மஸ்ரீ.அருள்நிதி.**SKM.** மயிலானந்தன் அவர்களால் (காணொளி காட்சி) மூலமாக உலக சமுதாய சேவா சங்க கொடியேற்றத்துடன் மரம் நடுதல் விழாவுடனும் அத்திக்கட்டானூர் கிராமிய சேவைத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.









உடற்பயிற்சி, காயகல்பம், தவம், அகத்தாய்வு, பிரம்மஞானம் மற்றும் அருள்நிதியர் பயிற்சி











## 5. மருத்துவ முகாம்

*28.03.2025 அன்று அத்திக்கட்டானூர் கிராமத்தில் VSP Medical Team மூலமாக மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் கிராம மக்கள் ஆண்கள்-12 , பெண்கள்-18, மொத்தம்-30 அன்பர்கள் கலந்துகொண்டனர்.*




## 6. மனநல ஆலோசனை முகாம்

*28.04.2025 அன்று Dr.Ramesh, Psychologist அவர்களால் அத்திக்கட்டானூர் கிராமத்தில் மன நல ஆலோசனை முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் ஊர்பொதுமக்கள் ஆண்கள்-11, பெண்கள்-40, மொத்தம்-51 பேர் கலந்துகொண்டனர். தனிநபர் ஆலோசனை 8 அன்பர்களுக்கு வழங்கப்பட்டது.*




## 7. சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம்

*20.04.2025 அன்று அத்திக்கட்டானூர் கிராமத்தில் மண்டலம், அறக்கட்டளை பொறுப்பாளர்கள் மற்றும் கிராம பொருப்பாளர்களால் கிராம மக்கக்கு 56 மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.*




## 8. முதல் நிலை அகத்தாய்வு





## 9. இரண்டாம் நிலை அகத்தாய்வு





## 10. மூன்றாம் நிலை அகத்தாய்வு





## 11. சர்வதேச யோகா தினம்

*21.06.2025 அன்று அத்திக்கட்டானூர் கிராமத்தில் சர்வதேச யோகா தினம் நடைபெற்றது. இதில் கிராம மக்கள் 90 அன்பர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*





## 12. நிறைவு விழா அழைப்பிதழ்



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

**நிகழ்ச்சி நிரல்**

மாலை

5.30 மணி : கொடியேற்றம், ஆரோக்கியமான அமைதி கிராமம் போர்டு திறப்பு.

5.45 மணி : இறைவணக்கம், குரு வணக்கம், தவம்.

6.00 மணி : வரவேற்புரை : பேரா. **மா.சிவராமன்** அவர்கள்,
செயலாளர், WCSC-கும்பகோணம் மண்டலம்.
முன்னிலை வகிப்பவர்கள் :
அருள்நிதி. **S.முத்து** அவர்கள்,
இணை இயக்குனர், WCSC-VSP,
தலைவர், WCSC-கும்பகோணம் மண்டலம்.
திருமதி. **மதுவிழி செந்தமிழ் செல்வன்** அவர்கள்,
முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், கருப்பூர்.
அருள்நிதி. **N.வேதகுமரச்செல்வன்** அவர்கள்,
மக்கள் தொடர்பு அலுவலர், அறிவுத்திருக்கோயில், ஆழியாறு.
பேரா. **S.தெய்வசிகாமணி** அவர்கள்,
இணை இயக்குனர், WCSC-விரிவாக்க இயக்குனரகம்.
அருள்நிதி. **R.கைலாசம்** அவர்கள்,
துணைத்தலைவர் VSP, WCSC-கும்பகோணம் மண்டலம்.
அருள்நிதி. **K.பரணிதரன்** அவர்கள்,
துணைத்தலைவர் VSP, தஞ்சை மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை

6.10 மணி : விருந்தினரை கௌரவித்தல்

6.15 மணி : செயல்பாட்டு உரை : அருள்நிதி. **P.முருகானந்தம்** அவர்கள்,
இயக்குனர், WCSC-VSP.

6.25 மணி : தலைமையுரை : திரு. **ஆ.மாவடியான்** அவர்கள்
நிறுவனர், காந்தி நலவாழ்வு சங்கம் (கவ்டெசி), கருப்பூர்.

6.35 மணி : தலைவரைப் பற்றிய அறிமுகம்

6.40 மணி : திட்டத்தை நிறைவு செய்து சிறப்புரை (காணொலி காட்சி)
அருள்நிதி. **SKM.மயிலானந்தன்** அவர்கள்,
சமூக சேவைக்காக பத்மஸ்ரீ விருது பெற்றவர்,
தலைவர், உலக சமுதாய சேவா சங்கம்.

6.50 மணி : **அனுபவ உரை**

7.10 மணி : **வேதாத்திரிய கும்மி நிகழ்ச்சி**
**கருப்பூர் கிராம அன்பர்கள்**


7.40 மணி : நன்றியுரை : பேரா. **S. பூர்ணசந்திரன்** அவர்கள்,
நிர்வாக அறங்காவலர், தஞ்சை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை.

உலக நல வாழ்த்து

## 13.அனுபவ உரை - **Result Inference**

| S.No. | Inference |
|---|---|
| 1 | 100% of the Student Participants are good in studies and other Activities (School/College) |
| 2 | Around 99% of the participants are benefitted with the exercises and leading a healthy life |
| 3 | 96% of the participants are able to control their anger |
| 4 | 96% of the participants are able to moralize their desire to be contented |
| 5 | 95% of the participants are able to remember things |
| 6 | 93% of the participants are able to eradicate their worries to maintain a healthy life |
| 7 | 94% of the participants are out of the depression compared to before joining the program |
| 8 | 84% (283) of the participants have made progress in family peace |
| 9 | Due to SKY Exercises and meditation- 73 participants cured of Joint pain, 73 participants cured of sugar problem,63 participants cured of Asthma and breathing problem, 31 participants cured of Blood pressure,63 participants cured of migraine and headache,52 participants cured of Overweight and obesity, 31 women participants cured of Menstrual problem (PCOD). |
| 10 | **100% of the participants are happy with the VSP Programme compared to only 26% before joining the program** |

## Feedback Trend



வாழ்க வையகம் குருவே துணை வாழ்க வளமுடன்



வாழ்க வளமுடன்

**அனுபவ உரை**

பெயர் : V. சங்கீதா

வயது : 49

ஊர் : K.R. கோம்பூர்

எங்கள் கிராமத்தில் [illegible] உலக சமுதாய சேவா சங்கத்தில் கிராமிய சேவை திட்டம் இலவசமாக துவங்கப்பட்டது. அதில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றேன்.

**பயிற்சிக்கு முன்**

1) எனக்கு 10 வருட காலமாக இடுப்பு வலி இருந்தது. அதனால் வீட்டு வேலை செய்ய முடியவில்லை, வீட்டு வேலை செய்வதற்கு கஷ்டப்பட்டு வந்தேன்.
2) motion problem இருந்தது.
3) முதுகு தண்டுவட வலி இருந்தது.
4) மன அழுத்தம் இருந்தது.

**பயிற்சிக்கு பின்**

1) அகத்தாய்வு பயிற்சி மூலம் மனஅழுத்தம் தினமும் குறைந்தது.
2) உடற்பயிற்சி, தியானம், மூலம் இடுப்பு வலி கொஞ்சம் கொஞ்சமாக சரியானது.
3) மகராசனம் பயிற்சி மூலம் முதுகு தண்டு வலி சீக்கிரமாக குறைந்தது.
4) யோக பயிற்சி தினமும் செய்வதால் கோபம் தவிர்த்து வீட்டில் சண்டை இல்லாமல் மன அமைதியுடன் வாழ வழி வகுத்தது.

இந்த பயிற்சியை ஏற்படுத்தி கொடுத்த உலக சமுதாய சேவா சங்கத்திற்கு, அருள் செல்வி அம்மா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி.

இப்படிக்கு,
V. சங்கீதா.

வாழ்க வையகம் குருவே துணை வாழ்க வளமுடன்

வாழ்க வளமுடன்



அனுபவ உரை

பெயர் : தேவகி

வயது : 47

ஊர் : K.R. தோப்பூர், அத்திகமடனூர்

எங்கள் கிராமத்தில் உலக சமுதாய சேவா சங்கத்தில் கிராமிய சேவை திட்டம் இலவசமாக துவங்கப்பட்டது. அதில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றேன்.

பயிற்சிக்கு முன்,

1.) மன அழுத்தம் இருந்தது

2) முழங்கால் வலி இருந்தது.

3.) முதுகு தண்டுவட வலி இருந்தது.

4.) மார்பு வலி

5) உடல் வலி

பயிற்சிக்கு பின்,

1.) அகத்தாய்வு பயிற்சி மூலம் மன அழுத்தம் குறைந்தது

2.) மகராசனம் பயிற்சி மூலம் முதுகு தண்டு வலி குறைந்தது

3.) தன்னம்பிக்கையும், தெளிவான சிந்தனையும் கிடைத்தது

4.) தொழில் மாற்றம் மற்றும் உயர்ந்த சிந்தனை உண்டானது.

இந்த பயிற்சியை ஏற்படுத்தி கொடுத்த உலக சமுதாய சேவா சங்கத்திற்கு . அருள் செல்வி அம்மா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி.

இப்படிக்கு,
T. Devaki

வாழ்க வையகம் உ. வாழ்க வளமுடன்



## அனுபவ உரை:

பெயர் : R. சீரங்கன் அபிராமி

வயது : 37

ஊர் : அத்திக் கட்டானூர்

எங்கள் கிராமத்தில் உலக சமுதாய சேவா சங்கத்தின் சார்பாக கிராமிய சேவை திட்டம் இலவசமாக துவங்கப்பட்டது. அதில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றேன். பயிற்சிகள் அனைத்தும் எளிமையாக இருந்தன.

### பயிற்சிக்கு முன்

பிரசவத்தின் போது அறுவை சிகிச்சை செய்ததன் காரணமாக இடுப்பு வலி, முதுகு வலி இருந்தது. ரொம்ப வருடகாலமாக உடல் சோர்வு இருந்தது. எங்கள் குடும்பம் கூட்டு குடும்பம். வீட்டில் யாராவது ஒரு சின்ன விசயத்திற்கும் ஏதாவது சொன்னால் கோபம் வரும். சண்டை போடுவேன். அதனால் மன நிம்மதி இருக்காது. என் குழந்தைகள் கொஞ்சம் விளையாட்டாகவும், சோம்பேறியாகவும் இருப்பார்கள். மகன் காலேஜ் படிக்கிறான். மகள் 12 ஆம் வகுப்பு படிக்கிறாள். படிப்பில் கவனம் குறைவு. என் குடும்பத்தில் ஒரு பிரச்சனை காரணமாக மன உளைச்சலில் இருந்தேன்.

### பயிற்சிக்கு பின்

இப்பொழுது 5 மாத காலமாக பயிற்சி எடுத்ததினால் உடல் வலி சரியாகிவிட்டது. உடல் எடை குறைந்துள்ளது. துரியாதீத தவம் செய்வதினால் மனம் அமைதியாக இருக்கிறது. தவம் செய்து வாழ்த்தின் பயனாக என் மகன் நன்கு படிக்கிறான். மகள் 12 ஆம் வகுப்பு தேர்வு நல்ல மதிப்பெண் எடுத்துள்ளார். என் கணவரும் குடும்பத்துடன் சண்டை போடுவதில்லை. அகத்தாய்வு பயிற்சியின் காரணமாக எண்ணம் ஆராய்தல், சினம் தவிர்த்தல் கவலை ஒழித்தல் பயிற்சி எனக்கு மிகவும் நல்ல மாற்றத்தை கொடுத்துள்ளது. இப்பொழுது கோபப்படுவதில்லை. குடும்பத்தில் அமைதி நிலவுகிறது. மனம் நிம்மதியாக இருக்கிறது. இந்த பயிற்சியை ஏற்படுத்தி கொடுத்த மகரிஷி அவர்களுக்கும் பேரா. அருட்செல்வி அம்மா அவர்களுக்கும் நன்றி. வாழ்க வளமுடன்

அபிராமி

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்.



அனுபவ உரை:

பெயர்: G. ரேவதி

வயது: 39

ஊர்: அத்திக்கடம்பனூர்.

எங்கள் கிராமத்தில் உலக சமுதாய சேவா சங்கத்தின் சார்பாக கிராமிய சேவைத்திட்டம் இலவசமாக துவங்கப்பட்டது. அதில் சேர்ந்து கொண்டு பயிற்சி பெற்றேன். பயிற்சிகள் அனைத்தும் எளிய முறையில் புரிந்து கொள்ளும்படி இருந்தது.

பயிற்சிக்கு முன் உடலில் உள்ள பிரச்சனைகள்:

அல்சர், குதிகால்வலி, தெளிவற்ற மனநிலை, அடிக்கடி ஒற்றைத்தலைவலி, மூச்சு சார்ந்த பிரச்சனைகள் போன்றவை இருந்தன.

பயிற்சிக்கு பின் உடலில் ஏற்பட்ட மாற்றங்கள்:

மூச்சு பயிற்சியை செய்வதால் சுவாசபிரச்சனை சரியாகின. கால்பயிற்சியால் குதிகால்வலி குணமாகின. சாந்தி தவத்தால் தலைவலி சரியாகின. தவத்தை மேற்கொள்வதால் தெளிவான மனநிலை கிடைத்துள்ளது. உடல் எடை குறைந்துள்ளது. அகத்தாய்வில் சினம்தவிர்த்தல், கவலை ஒழித்தல் பயிற்சி எனக்கு நல்ல மாற்றத்தை ஏற்படுத்தியது. குடும்பத்தில் மகிழ்ச்சி, அமைதி, வாழ்த்தின் பயனாக. குழந்தைகள் படிப்பு சிறப்பாக இருக்கின்றன. இப்பயிற்சியின் மூலம் பல மாற்றங்களை உணர்ந்துள்ளேன்.

இப்பயிற்சியை ஏற்படுத்திகொடுத்த உலக சமுதாய சேவா சங்கத்திற்கும், கிராமிய சேவைத் திட்டத்திற்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க வளமுடன்.

இப்படிக்கு.

G. Revathi.

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்.



அனுபவ உரை:

பெயர் : சை. மௌனிகா

வயது : 22.

ஊர் : அத்திக்கடைபாவூர்.

எங்கள் கிராமத்தில் உலக சமுதாய சேவா சங்கத்தின் சார்பாக கிராமிய சேவைத்திட்டம் இலவசமாக துவங்கப்பட்டது. அதில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றேன். பயிற்சிகள் அனைத்தும் எளிய முறையில் சுலபமாக புரிந்து கொள்ளும்படி இருந்தது.

பயிற்சிக்கு முன் உடலில் உள்ள பிரச்சனைகள் :

அடிக்கடி மறதி, சளிபிடித்தல், கடுஞ்சினம், தெளிவற்ற மனப்பான்மை, உடல் எடை அதிகம், ஆரோக்கியமற்ற உணவுமுறை போன்றவை இருந்தன.

பயிற்சிக்கு பின் உடலில் உள்ள மாற்றங்கள் :

நான் தேர்வு சிறப்பாக எழுதியுள்ளேன். தியானதவம் செய்து படித்து நன்கு தேர்வு எழுதினேன். நான் இன்று அகத்தாய்வு வகுப்பில் கலந்து கொண்டேன். பயிற்சிக்கு பின் சினம் குறைந்து, தெளிவான மனநிலை உள்ளது. உடல் எடை குறைந்துள்ளது. இப்போது, ஆரோக்கியமான உணவுமுறைக்கு எங்கள் குடும்பத்திலுள்ள அனைவரும் மாறிவிட்டோம். தவம் மற்றும் காயகல்பத்தின் பயனாக தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்றுள்ளேன், மறதி குறைந்துள்ளது. இப்பயிற்சியில் எங்கள் குடும்பத்தில் அனைவரும் கலந்துகொண்டு பயன் பெற்றுள்ளோம். இத்திட்டத்தை எங்களுக்கு அளித்த, உலக சமுதாய சேவா சங்கத்திற்கும், இப்பயிற்சியை ஏற்படுத்திக்கொடுத்த அருட்செல்வி அம்மா அவர்களுக்கும் நன்றி!

வாழ்க வளமுடன்.

இப்படிக்கு,
S. Mounika

## 14. எதிர்காலத் திட்டங்கள்:

ஆரோக்கியமும், அமைதியும் மிக்க அத்திக்கட்டானூர் கிராமம், தாரமங்கலம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் கீழ் தவமையமாக தொடர்ந்து செயல்படும். இத்தவமையத்தில் தினமும் மனவளக்கலை யோகா பயிற்சிகள் நடத்தப்படும். பயிற்சி எடுத்த அன்பர்கள் தொடர்ந்து பயிற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கும், பயிற்சி எடுக்காத அன்பர்கள் பயிற்சிகளை எடுத்துக் கொள்வதற்கும் இத்தவமையம் தனது ஒப்பற்ற சேவையை செயல்படுத்த உறுதுணையாக இருக்கும்.

## 15. வாழ்த்து:

அத்திக்கட்டானூர் கிராமத்தை அமைதி கிராமமாகவும், ஆரோக்கிய கிராமமாகவும் மாற்றுவதற்க்கு கிராமிய சேவைத் திட்டத்தை வழிநடத்திக் கொண்டிருக்கும் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர், பத்மஸ்ரீ.அருள்நிதி.SKM.மயிலானந்தன் அவர்களுக்கும், இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு பொருள் உதவி *Prof.V.S.Arutselvi, Director of VISION* அவர்களுக்கும், இத்திட்டத்தை ஒருங்கிணைந்து நடத்தி கொடுத்த சேலம் மண்டல பொறுப்பாளர்களுக்கும், தாரமங்கலம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை பொறுப்பாளர்களுக்கும், பல்வேறு சிறப்பு முகாம்களை நடத்திக் கொடுத்த அனைத்து ஒருங்கிணைப்பாளர்களுக்கும், பயிற்சிகளை நடத்திக்கொடுத்த மனவளக்கலை கிராம ஆசிரியர்கள் *Asst.Prof.Boopathy & Asst.Prof.Kavitha* அவர்களுக்கும் சிறப்பு வகுப்புகள் நடத்திய ஆசிரிய பெருமக்களுக்கும், இத்திட்டம் முழுமையாக செயல்பட ஒருங்கிணைந்து சேவையாற்றிய *VSP* நிர்வாகக்குழு, வளர்ச்சிக்குழு மற்றும் சேவைக்குழு உறுப்பினர்களுக்கும், பயிற்சிகள் பெற்று பயனடைந்த ஊர்ப்பொது மக்கள் அனைவர்க்கும் உலக சமுதாய சேவா சங்கம் கிராமிய சேவைத்திட்ட இயக்குனரகத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

உயர்ந்தோர்கள் ஒன்றுபட்டு, தாழ்ந்தோர்கள் தம்மை
உயர்த்துவதே தொண்டு நிலையங்கள் நோக்கம்.
உயர்ந்தநிலை அனைவருக்கும் கிட்டும் போதே
உலக சமாதனம் என்ற அமைதி உண்டாம்.

-வேதாத்திரி மகரிஷி

தொண்டாற்றி இன்பம் காண்போம்! நன்றி, வாழ்க வளமுடன்!

குருவின் சேவையில்
*WCSC-VSP* இயக்குனரகம்
அறிவுத்திருக்கோயில், ஆழியார்